அமைத்து தர முடியாது என்று செல்கிற கடைப்பிடிக்கிற நடைமுறை அந்த கான்செப்ட் தவறு. எனவே தாலுக்காவை மையமாக வைத்துக்கொள்ளுங்கள் என்று சொல்லி அதை பேச்சிக்காக வைத்துக் கொள்ளுங்கள் என்று மாநில அரசு சிபாரிசு செய்திருக்கிறது.

திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, எந்த ஒரு மாவட்டத்திலும் ஏதாவது ஒரு தொழில் குறிப்பிடத்தக்க தொழில் இருந்தாலும்கூட அந்த மாவட்டத்தை அதனால் முன்னேறிய மாவட்டம் ஆகாது என்ற கொள்கையையும் அதற்கு மாறாக எந்த ஒரு மாவட்டமாக இருந்தாலும் வறுமைக்கோட்டுக்கு கீழே உள்ள மக்கள் என்ற புள்ளிவிவர கணக்குப்படி எங்கே அந்த தொகை அதிகம் இருக்கிறதோ அந்த அடிப்படையில் அகில இந்திய அரசு பின்தங்கிய மாவட்டங்களை தீர்மானிக்கவேண்டும் என்று வலியுறுத்து வதற்கு தமிழக அரசு முன்வருமா என்று அறிய விரும்பு கிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக மாநில அரசு மைய அரசை வலியுறுத்தும். ஏன் என்றால் நான் முன்னால் சொன்னதுபோல, முதலிலே அமைச்சர் அவர்கள் மட்டத்திலே இங்கே தொழில்கள் வருகிறபோது பேச்சுவார்த்தை அளவிலே வேறு இடங்களுக்கு பின்தங்கிய மாவட்டங்களுக்கு போகும் என்று சொல்வது இப்போது லெட்டர் ஆப் இன்டெண்டு கொடுக்கிறபோது அந்த லெட்டர் ஆப் இன்டெண்டில் ஒரு கண்டிஷன் தருகிறார்கள். லைசன்ஸ் வேண்டும் என்றால் லெட்டர் ஆப் இன்டெண்டு செய்கிறபோது இங்கேயிருந்து யாராவது தொழில்கேட்டு இன்டஸ்டிரியலிஸ்டு அப்ளிகேஷன் போடுகிறபோது முதலிலே லெட்டர் ஆப் இன்டெண்டு கொடுக்கிறார்கள். லைசன்ஸ்க்கு முன்னாலே அந்த லெட்டர் ஆப் இன்டெண்டிலே ஒரு கன்டிஷன் போடுகிறார்கள் லைசன்ஸ் பெற வேண்டும் என்றால் இந்த தொழிலை இந்த 82 மாவட்டத்திலே ஏதாவது ஒரு மாவட்டத்தில் துவங்கினால்தான் லைசன்ஸ் என்று லெட்டர் ஆப் இன்டெண்டு-ல் கண்டிஷன் போடுகிறார்கள். இந்த மோசமான நிலைமையினால் தமிழ்நாடு பாதிக்கப்படும். எனவே அந்த கான்செப்டை நிச்சயமாக மாற்றி தாலுகா என்று அறிவிக்க வேண்டும் என்று தொடர்ந்து மாநில அரசு மைய அரசை வற்புறுத்தும்.

மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டம்.

*வினா எண் 119—திரு. சி. சிவப்பிரகாசம்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் எந்த எந்த திட்டங்கள் செயல்படுத்தப் படுகின்றன?

(ஆ) அவைகளில் கொல்லிமலையில் எந்த எந்த திட்டங்கள் செயல்படுத்தப் படுகின்றன?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கீழ்கண்ட திட்டங்கள் செயல் படுத்தப்படுகின்றன.

1, தோட்டக்கலை; 2. மண்வளப்பாதுகாப்பு; 3. கூட்டுறவு; 4. சிறுபாசனம்; 5. கல்வி; 6. சமூக நலம்; 7. மின்வசதி; 8. கிராமப் புற கைத்தொழில்; 9. பட்டுப்புழு வளர்ப்பு; 10. சாலை அமைத்தல்; 11. வனவளம்; 12. கால்நடை பராமரிப்பு; 13. சமுதாய வளர்ச்சி; 14. வீட்டுவசதி; 15. குடிநீர் வசதி யளித்தல்; 16. மருத்துவம் மற்றும் சுகாதாரம்,

(ஆ) மேலே கூறப்பட்ட எல்லாத் திட்டங்களும் கொல்லி மலையில் செயல்படுத்தப்படுகின்றன.

திரு. சி. சிவப்பிரகாசம்: தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் மூலம் சென்ற ஆண்டு எவ்வளவு தொகை ஒதுக்கப் பட்டது? 1983-84 ஆம் ஆண்டிற்கு எவ்வளவு நிதி ஒதுக்கம் செய்ய அரசு உத்தேசித்துள்ளது?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: பழங்குடியினர் மேம் பாட்டுத் துணைத் திட்டத்திற்கு தமிழகத்திலே 9 இடங்களில் 1976-77 ஆண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. சென்ற ஆண்டு 451.36 லட்சம் இதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. 1983—84 ஆம் ஆண்டிற்கு 600 லட்சம் ஒதுக்கவேண்டுமென்று திட்டமிடப்பட்டிருக்கிறது.

திரு. சி. சிவப்பிரகாசம்: மலைவாழ்மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்படும் குடிநீர் திட்டத்தின் மூலமாக குழாய்க் கிணறுகள் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. அவை சீராக இல்லாததால் சிறிய ஆறுகள், ஓடைகள் இவைகள் மூலமாக குடிநீர் திட்டத்தை நிறைவேற்ற அரசு முன்வருமா? அங்கே உள்ள மக்கள் பயன் அடைகிற முறையில் சில்வர் ஓக், யூகலிப்டஸ் போன்ற மரங்களின் நாற்றுக்களை மானிய விலையில் தருவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : தலைவர் அவர்களே, குடிநீர் பற்றி எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். மலைப் பகுதியிலே அது மிகப் பெரிய பிரச்சினையாக இருக்கிறது என்பதை அரசு உணர்ந்து இருக்கிறது. அவர்கள் சொல்வதிலே உள்ள சாத்தியக்கூறுகளுக்கேற்ப அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் கேட்ட இரண்டு கேள்விகளுக்கும் ஒட்டுமொத்தமாக நான் இந்தப் பதிலை தெரிவிக்க விரும்புகிறேன்,

திரு. ஜி. மூர்த்தி: மலைவாழ் மக்களுக்கு குறிப்பிட்ட இடங் களில் தனி ஒன்றியம் அமைத்து சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : அத்தகைய எண்ணம் இல்லை.